பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 ஐப்பசி 6 ஜூல்-கஜ் 12 இதழ் 253
சித்திரபானு வருடம் புதன்கிழமை 22-10-80

SRI LANKA - JAFFNA CAMPUS
UNIVERSITY LIBRARY
RECEIVED
1980-10-21
PERIODICALS DIVISION

## யாழ். மாவட்டத்தில் வயர்லஸ் தொடர்பு சேவை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் புதிதாக மேலும் 94 வயர்லஸ் தொடர்பு சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. நவம்பர் மாத இறுதிக்குள் அவை அமைக்கப்படுமென சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற ஒரு வயர்லஸ் தொடர்பு சேவை ஒன்று கடந்த இரண்டு மாதங்களுக்கு புங்குடுதீவில் யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும் யாழ். அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச்சேவை ஆரம்பிக்கப்பட்டபின் புங்குடுதீவு மக்கள் யாழ்ப்பாணத்தோடு நேரடித் தொடர்பு கொள்ளக் கூடியதாகவுள்ளது.

இதேபோன்று யாழ். மாவட்டத்திலுள்ள சகலபகுதி மக்களும் எப்பகுயுடனும் எதுவித தாமதமுமின்றித் தொலைபேசித் தொடர்பை உடனடியாக மேற்கொள்ளும்பொருட்டே 94 வயர்லஸ் தொடர்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (...)

### சிறிமா குடியுரிமை ரத்து:

# பாராளுமன்ற தீர்மானம் மாற்றப்படமாட்டாது!

## நுகேகொடையில் ஜனாதிபதி உறுதி

(நுகேகொடை)

திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமைகளை ரத்துச்செய்ததற்கு பாராளுமன்றம் எடுத்த தீர்மானம் மாற்றப்படமாட்டாது என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன உறுதி கூறியுள்ளார்.

நுகேகொடையில் நேற்று மாலை நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்ட கருத்தை வெளியிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில்; ''காரணமின்றி அவசரகாலச்சட்டத்தைப் பிரகடனப்படுத்தி அதன்கீழ் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாக ஆணைக்குழுவினால் குற்றவாளியாகக் காணப்பட்ட திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமையை நீக்க பாராளுமன்றம் தீர்மானித்துள்ளது. பாராளுமன்றம்தான் அதிஉயர்ந்த சட்டவாக்க மன்றம். உயர் நீதிமன்றத்தீர்ப்பு எவ்வாறாக இருந்தாலும் பாராளுமன்றத்தின் தீர்ப்பு மாற்றப்படமாட்டாது'' என்று கூறினார்.

## யோகேஸ் அறிக்கையில் ஒரு திருத்தம்

(யாழ்ப்பாணம்)

''ஒதுக்கப்பட்ட நிதி முழுதும் செலவிட்டு பாராட்டும் கிடைத்தது'' என்ற தலைப்பில் நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் விடுத்த அறிக்கையில் ''இவ்வறிக்கையின்படி ஒதுக்கப்பட்ட நிதி இரண்டு கோடியே இருபது லட்சம் ரூபா. இதில் ஒரு கோடியே எழுபத்து நாலு லட்சம் ரூபா இயந்திரங்கள் வாங்குவதற்கெனச் செலவிடப்பட்டது'' என்றிருக்கும் பகுதியில் தவறேற்பட்டுவிட்டது. இந்தப் பகுதியை பின்வருமாறு திருத்தி வாசித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(8-ம் பக்கம் பார்க்க)

### பிரதமர் நடத்திய முதலாவது நிருபர்கள் மாநாடு:

## சட்டம், ஒழுங்கு திருப்தியாக இல்லை: குற்றச்சாட்டை இந்திரா ஏற்றார்!

புதுடில்லி, அக். 21

இந்தியாவில் சட்டம்; ஒழுங்கு முற்றிலும் திருப்திகரமாக இல்லை என்ற குற்றச்சாட்டை பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஏற்றுக்கொண்டுள்ளார்.

பாரதப் பிரதமராக திருமதி இந்திராகாந்தி கடந்த ஜனவரி மாதத்தில் பதவியேற்ற பின்னர் இன்று பிற்பகல் முதல் தடவையாக பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டை நடத்தினார். இம்மகாநாட்டில் உள்ளூர் பத்திரிகையாளர்களும் வெளிநாட்டு நிருபர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

நிருபர் ஒருவரின் கேள்வியொன்றுக்குப் பதிலளித்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி நாட்டில் சட்டம் ஒழுங்கு இப்பொழுது முற்றிலும் திருப்திகரமாக இல்லை என்றாலும்; சற்றே திருந்தி உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறினார்.

இலங்கையின் முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறிக்கப்பட்டது குறித்து நிருபர் ஒருவர் கேட்டபோது இது குறித்து தாம் மிகவும் வருத்தமடைந் திருப்பதாகவும், இது ஒரு மோசமான செயல் என்றும் அவரது குடும்பம் பெரும் துன்புறுத்தலுக்குள்ளாகியுள்ளது என்றும் கூறினார்.

மற்றுமொரு கேள்விக்குப் பதிலளித்த பிரதமர் திருமதி இந்திரா; சர்வதேச ரீதியில்

[8-ம் பக்கம் பார்க்க]

## 26 அடி நீளமுள்ள இராட்சத மீன்!

(யாழ்ப்பாணம்)

இராட்சத மீன் ஒன்று இறந்த நிலையில் தொண்டமனாற்றுக் கடற்கரையில் ஒதுங்கியுள்ளது.

இந்த மீனைப் பார்வையிடுவதற்காகப் பெரும் தொகையான மக்கள் தினமும் சென்றவண்ணம் இருக்கின்றனர்.

அண்மையில் பெய்த கடும் மழையின்போது இந்த மீன் தொண்டமானாற்றுக் கடற்கரையில் ஒதுங்கியது. இருபத்தாறு அடி நீளமும் ஆறு அடி அகலமும் கொண்ட இம்மீன் ஓந்தில் இனத்தைச்சேர்ந்தது என்று நம்பப்படுகிறது. (கொ)

ஹோம் பினன்ஸ் லிமிட்.
82, கன்னநிட்டி ரோட், யாழ்ப்பாண.
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000/-க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
உங்கள் பணத்தை
விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலி வீதி கொழும்பு-3.
தொலைபேசி : 89190

## ஸ்ரீ கேதாரகௌரி நோன்பு

(திருகோணமலை)

திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயிலில் ஸ்ரீ கேதார கௌரி நோன்பு ஆரம்பமாகி கௌரி அம்பாளுக்கு தினமும் அபிஷேகமும், விசேஷபூசையும் நடைபெற்று வருகிறது. அடுத்தமாதம் 7ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு காப்புப் பூசை நடைபெற்று திருக்காப்புகள் வழங்கப்படும்.

## ஈராக் தாக்குதலை ஈரான் முறியடிப்பு!

லண்டன், அக். 21

ஈரானின் துறைமுகநகரமான கொரம்ஷரில் நேருக்கு நேர் கடும் சண்டை நடைபெறுவதாக தெஹ்ரான் வானொலி அறிவித்துள்ளது.

தமது படைகள் ஈராக்கின் தாக்குதலை முறியடிப்பதாகக் கூறும் ஈரான் புதுப் படைப்பலமும் தனக்குத் தேவைப்படுவதாகக் கூறுகிறது.

கொரம்ஷார் நகர் சுற்றிலும் உள்ள ஈராக் படைகளுக்குக் கடும் சேதத்தை ஈரான் துருப்புக்கள் ஏற்படுத்தியுள்ளதாக தெஹ்ரான் வானொலி அறிவித்துள்ளது.

ஈரானின் அபடான் நகரத்தில் ஈராக் படைகளுக்கும் ஈரான் படைகளுக்குமிடையே கோர யுத்தம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதே வேளையில் ஈராக், கைப்பற்றி வைத்திருக்கும் 12 ஈரானிய சிவில் அதிகாரிகளையும் விடுவிக்கவேண்டுமென்று கோரி ஈரான் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திடம் கேட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இஸ்லாமிய நாடுகள் குழுவின் பிரதம செயலாளர் ஜனாப் கௌபீக்ஷெட்டி இந்த யுத்தத்தைச் சமரசமாகத் தீர்த்துவைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு ஈரான்

(8-ம் பக்கம் பார்க்க)

## பெரும்பாக கல்விப்பணிப்பாளருக்கு மேலதிக அதிகாரங்கள்!

### கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

''புதிதாக நியமிக்கப்பட்ட பெரும்பாக கல்விப் பணிப்பாளர்களின் சேவையின்கீழ், சகல பிராந்தியங்களிலும் ... பெரும் முன்னேற்றம் ஏற்படும்'' என்று கல்வி அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்கா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் பிராந்திய மேற்பார்வை, நிர்வாக பிரிவின் கீழ் புதிதாக நியமிக்கப்பட்ட 5 பெரும்பாக கல்விப் பணிப்பாளர்களுக்குமான பணிகள் பற்றி கல்வி அமைச்சு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு நம்பிக்கைதெரி

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்துக்கு அருகாமையிலுள்ள றோட்டுக்கரைக் காணி 1 பரப்பு 10½ குளி. சுத்தமான உறுதி. தொடர்பு கொள்ளவும் A. S. நாகரட்ணம், இராஜஸ்தான், உரும்பராய் தெற்கு, உரும்பராய். 7112

18.....20 மாத முட்டையிடும் கோழிகள் 100 விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு 68, 4-ம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம். 7155

முற்றிலும் திருத்தியமைக்கப்பெற்ற செவலே (Chevr let) லொறி, மொறிஸ் மினி வான், ஒபல் ரெகார்ட் கார், விற்பனைக்குண்டு. காலை 10-00 மணிக்கும் பிற்பகல் 5 மணிக்கும் இடையில் பார்வையிடலாம். சுபாஸ், 37, விக்டோரியா றோட், யாழ்ப்பாணம். 7140

### வகுப்புக்கள்

மோட்டார் மெக்கானிசம், எலக்ரிக்கல் வயரிங், வெல்டிங், ஆகியவற்றின் புதிய வகுப்புக்கள் ஒவ்வொரு மாத முதல் பகுதியிலும் ஆரம்பிக்கப்படும். தொடர்பு கொள்க:- Patrician Industrial Institute 59, St Patrick's Rd, Jaffna. 7146

### தேவை

பரந்தனில் உள்ள வைத்திய நிலையம் ஒன்றுக்கு தாதி/மருத்துவத் தாதி உடனடியாக தேவை. சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும். 30-10-80-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். வைத்திய அதிகாரி, கிறீன் மெமோறியல் வைத்தியசாலை, மானிப்பாய். 7147

## குருமாருக்கு தமிழ்ப்பாடம்

(மன்னார்)

மடுறோட் சிங்கள மகாவித்தியாலயத்தில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு. முருகசூரியன் மடுறோட் சிறீகோதராஜ மகாவிகாரையின் அதிபதியின் கோரிக்கைக்கு இணங்க அங்குள்ள பௌத்த குருமாருக்கு தமிழ் கற்பித்து வருகிறார்.

## அடிக்கல் நாட்டினார்

(மன்னார்)

தலைமன்னாரில் 20 லட்ச ரூபா செலவில் நிறுவப்படவிருக்கும் ஐஸ் தொழிற்சாலைக்கான அடிக்கல்லை மூதூர் எம்.பியும், மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப். எம். ஈ. எச். மஹ்றூப் நாட்டி வைத்தார்.

## இளைஞர் மன்றம் கடன்திட்டம்

(மன்னார்)

தொழில் வாய்ப்பு, சுயமுயற்சி தொடர்பாக மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றம் 30 அங்கத்தவர்களுக்கு வங்கிமூலம் 5 ஆயிரம் ரூபா கடன் வழங்கும் திட்டத்தை அமுல் நடத்தவிருக்கின்றது.

சுயமுயற்சி, தொழில் வாய்ப்பு, தொடர்பாக தேசிய இளைஞர் சேவைமன்றம் நடத்திய கருத்தரங்கில் கலந்து கொண்டு பயிற்சிபெற்ற 3 அங்கத்தவர்களுக்கு கடன் சிபார்சு செய்ய விருப்பதாக மாவட்ட இளைஞர்சேவை அலுவலர் திரு. ஆறுமுகம் தெரிவித்தார். அங்கத்தவர்கள் சுயதொழில் முயற்சிகளை மேற்கொண்டு தம் வாழ்க்கைத் தரத்தை விருத்திசெய்யும் நோக்குடனேயே கடன் வழங்கப்பட விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# அளவெட்டி இளைஞன் மரணம்; கொலைஎனத்தீர்ப்பு

(மாவிட்டபுரம்)

அளவெட்டி வடக்கில் இடம் பெற்ற 19 வயது இளைஞரது மர்மமரணம் ஒரு கொலையே என மல்லாகம் நீதிபதி தீர்ப்பு வழங்கியுள்ளார்.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த காளிதாஸ் கணேசமூர்த்தி என்னும் 19 வயது இளைஞர் அடிகாயங்களுடனும் நஞ்சருந்திய நிலையிலும் மர்மமான முறையில் மரணத்தைத் தழுவியதையடுத்து மல்லாகம் நீதிபதி திரு. சி. ஆர். இராஜசிங்கம் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவரது உள்ளுறுப்புக்கள் பரிசோதனைக்காக கொழும்பு இரசாயனப் பகுப்பாளருக்கு அனுப்பப்பட்டு அதன் அறிக்கை கிடைக்கும் வரை மரணவிசாரணை ஒத்திப் போடப்பட்டிருந்தது.

மேற்படி மரணவிசாரணை நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயம் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி செல்வி நவமலர் கனகரத்தினம் கொழும்பு இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கை கிடைத்துள்ளதாகக் கூறி அதனைச் சமர்ப்பித்து சாட்சியமளித்தார்.

இம்மரணம் அடிகாயங்களினாலும் ஏற்பட்டிருக்கலாம், நஞ்சினாலும் ஏற்பட்டிருக்கலாம் என அவர் தெரிவித்ததையடுத்து நீதிபதி இது ஒரு கொலையே எனத் தீர்ப்பு வழங்கினார்.

மேற்படி சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த அளவெட்டி வடக்கைச் சேர்ந்த செல்லையா கந்தசாமி, கந்தவனம் லோகநாதன், இராஜரத்தினம் இராமச்சந்திரன் ஆகியோர் பின்னர் மேல் நீதிமன்ற அனுமதியின் பேரில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது தெரிந்ததே.

மேற்படி மரணவிசாரணையில் இச்சந்தேக நபர்களின் நலனைக் கவனிக்க சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், கே. விஜயேந்திரா, திருமதி மோகாந்தி பீரிஸ் ஆகியோர் ஆஜராகினர்.

இறந்தவர் தரப்பில் சுன்னாகம் பொலிசார் ஆஜராகியிருந்தனர்.

## நடப்புவருட நிர்வாகிகள்

(வேலணை)

அகில இலங்கை உள்ளூராட்சிமன்ற சித்த வைத்தியசாலைகளில் கடமையாற்றி வரும் மருந்துக்கலவையாளர்களின் யாழ். மாவட்ட கிளையின் புனருத்தாரண பொதுக்கூட்டம் அண்மையில் கைதடி ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி மண்டபத்தில் தலைவர்: திரு. க. சிவராசா தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர்கள் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர். க. சிவராசா, உப தலைவர் பெ. தங்கராசா, இணைச்செயலாளர்கள் க. சண்முகநாதன், க. மார்க்கண்டு, தனாதிகாரி; க. ஜெகதீஸ்சந்திரன் மற்றும் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

# மட்டக்களப்புஆசிரியர்களுக்கு மீண்டும் விடுமுறைச்சலுகை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கு நிறுத்திவைக்கப்பட்ட அரை நாள் விடுமுறை, குறுகிய நேர விடுமுறை என்பன மீண்டும் வழங்கப்படும்.

இம்மாதம் முதல் மட்டக்களப்புப் பாடசாலை ஆசிரியர்களுக்குக் குறுகிய நேர விடுமுறை, பாடசாலை தொடங்கியவுடன் அரைநாள் விடுமுறை வழங்கக்கூடாதென வட்டாரக் கல்வி அதிகாரிகள் அதிபர்கட்கு உத்தரவு பிறப்பித்ததையடுத்து இவ்விடுமுறைகள் வழங்கப்படுவது தடைசெய்யப்பட்டது.

இவ்விடயம் இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்திற்கு ஆசிரியர்களால் சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் மட்டக்களப்பு கல்விஇலாகாவுடன் தொடர்பு கொண்டதையடுத்து மீண்டும் இவைகள் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படுமென நிர்வாக அதிகாரி திரு. மகாசிவத்திடம் தெரிவித்துள்ளார்.

## விஞ்ஞானவளர்ச்சியால் கடவுள்நம்பிக்கையற்று ஒரு பகுதி மக்கள் வாழ்கின்றனர்

(அரியாலை)

வளர்ந்து வரும் விஞ்ஞானத்தின் மூலம் மனிதன் தனக்கு வேண்டிய சகலவற்றையும் உண்டாக்கிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையினால் கடவுள் என்றொருவர் இல்லை என்ற கொள்கையுடையவனாக வாழத்தொடங்கியுள்ள காலத்தில் நாம் வாழ்கின்றோம். கடவுள் நம்பிக்கை அற்றவர்களாக வாழுகிறன் ஒரு பகுதியினர்களின் மத்தியில் நாம் கடவுள் நம்பிக்கையுள்ளளர்களாக வாழ்ந்து வருகிறோம். மத நம்பிக்கை குறைந்து வருகிற இக்கால கட்டத்தில் ஆலயங்களில் நடைபெறும் ஆராதனைகளில் புதிய முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. இம்முறைகள் மத நம்பிக்கையையும், கடவுளின் மேல் பற்றுதலையும் உண்டாக்குவனவாக அமைகின்றது.

இவ்வாறு இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாக புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் ஞாதர் ஜெயசிங்கம் நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனையில் ஆசியுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து அருளுரை நிகழ்த்துகையில் கூறியதாவது நாம் தனித்தும் குடும்பமாகவும் இறைவனை வணங்குகிறோம். இதன் மூலம் இறைவனிடம் எமது அன்பைச் செலுத்துகிறோம். இப்படியான அன்பிலும் மேலான அன்பை இறைவன் தனது மரணத்தின் மூலம் எம்மீது செலுத்தினார். அன்பு சுயாதீனமுள்ளதாக இருந்தாலும் நாம் இறைவன் மீது செலுத்தும் அன்பு இறைவனோடு எம்மைத் தொடர்பு படுத்தும் சாதனமாக அமைந்திருக்கிறது என்றார். (வெ)

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 6-ம் திகதி

(புதன்கிழமை)

(22-10-1980)

மேடம்: பேச்சுவன்மையினால் பெரும் புகழ் உண்டாகும், எதிர்பாராத பொருள் வரவிற்கும் இடமுண்டு, கல்வி கற்கும் மாணவர்கட்கு இன்று பொன்னான நாள்.

இடபம்: நினைவின் நிழலாட்டம் உங்களின் நிம்மதியைப் பறக்கச் செய்யும், கொடுக்கல் வாங்கலில் மிகவும் கவனமாக இருக்கவும், இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும்.

மிதுனம்: அன்னையின் ஆணைமூலம் அமைதிக்கு வழி பிறக்கும், தரும காரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள், சுற்றுடலில் மதிப்பு உயரும், தெய்வத்தின் துணையும் உண்டு.

கடகம்: செய்தொழிலால் முன்னேற்றமும் புகழும் கிடைக்கும், வழக்குவிவகாரங்களில் முடிவு காணப்படும், மகிழ்ச்சியைத் தேடித்தரும் செய்தியும் கிடைக்கலாம், புத்திரர்களால் புகழுக்கும் இடமுண்டு.

சிங்கம்: தற்பெருமை தவறான பாதைக்கு அழைத்துச் செல்லும், பல வழிகளிலும் பொருள் விரயமாகும், உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும், நண்பர் ஒருவரைப் பகைத்துக் கொள்ளவும் நேரிடும்.

கன்னி: களஸ்திரவழியால் நன்மைகள் கிடைக்கும், குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு, காதலர்களுக்கு இன்று கனவுஷியான நாள், சிலருக்கு எதிர்பாராத பொருள்வரவுக்கும் இடமுண்டு.

துலாம்; பொருள் வீணான வழிகளில் செலவாகும், நன்மை செய்யப்போய் பொல்லாங்கு கேட்க நேரிடும், தொழில் முன்னேற்றமும் தடைப்படும், எதிர்பாராத விதமாகச் சிக்கலில் மாட்டிக் கொள்ள வேண்டாம்.

விருச்சிகம்: தேடியது கிடைக்கும், பிதாவழியால் பொருள் வரவிற்கும் இடமுண்டு, பொதுப்பணி மூலம் புகழும் கிட்டும், தருமகைங்கரியங்களில் விருப்பு மேலிடும், அரசியல்வாதிகளுக்கு அதிர்ஷ்டம் அடிக்கலாம்.

தனுசு: சடமையில் ஆர்வம் பிறக்கும், கண்ணியம் சேரும், உறவினர் மத்தியில் ஒற்றுமை மலரும், பிரயாண சுகமும் உண்டு, சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம்.

மகரம்: மக்களால் பெருமையும் மனதில் நிம்மதியும் கிடைக்கும், வரவேற்கக்கூடிய சம்பவங்களும் இடம்பெறும், புதிய தொழில்மூலம் லாபமும் கிடைக்கும்.

கும்பம்: சிந்தனை புதிர் நிறைந்ததாக இருக்கும், சீறி வரும் கோபத்தை அடக்கி நடக்கவும், பணவிவகாரத்தின்மூலம் பகை தோன்றலாம், தொழில்துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

மீனம்: அவசர முடிவின் மூலம் துன்பப்பட வேண்டிய நிலை உருவாகும், கரும்பாக இனித்தது இன்று வேம்பாகக் கசக்கக்கூடும், அதிக முயற்சி எடுத்தாலும் அற்ப லாபமே கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

## சோசலிச முன்னணிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சோசலிச முன்னணியின் கருத்தரங்கொன்று நாளை காலை யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் முன்னாள் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்வார். (வெ)


## முக்கிய அறிவித்தல்

எம்மால் 6-11-80ல் நடாத்தப்பெற இருந்த

அதிஷ்ட சீட்டிழுப்புப் போட்டி

1981-ம் ஆண்டு ஜனவரி 30-ந் திகதி

நடைபெறும் என்பதை இத்தால்

அறியத்தருகிறோம்.

முடிவுகள் யாவும் 1981-ம் ஆண்டு

பெப்ரவரி 2-ந் திகதி

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும்.

இ. சுப்பிரமணியம் அன் கொம்பனி,

சுன்னாகம். 7153


## அமரத்துவ நன்றி வழங்கலும் அந்தியேட்டி அழைப்பும்

அவதாரம்: 17-1-33



அமரத்துவம்: 7-9-80

தம்பிப்பிள்ளை சதாசிவம் (கிராமசேவையாளர்)

நல்லூர் பூநகரியைச் சேர்ந்தவரும் கொல்லகுறிச்சி, பூநகரி, நல்லூர், நல்லூர் முன்னாள் கிராமசேவையாளருமாகிய அமரத்துவமடைந்த எனது கணவர் தம்பிப்பிள்ளை சதாசிவத்தின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்ட அனைவருக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியிருந்தோர்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை வழங்கி அன்னாரது இல்லத்தில் 25-10-80 ல் நடைபெற இருக்கும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மனைவி: திருமதி ச. சதாசிவம்

பெருமகன்: செ. சற்குணனந்தன்

மாமி: திருமதி வ. செல்லத்துரை

பூநகரி - நல்லூர்

பூநகரி. 7154

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள்சாமி குருபூசை

(மாவிட்டபுரம்)

தொண்டமானாறு செல்வச் சந்நிதியில் வாழ்ந்து சமாதியடைந்த மௌனகுரு கடவுள் சாமிகளது குருபூசை தினம் இன்று புதன்கிழமை மறவன் புலோவிலுள்ள அவரது சமாதியில் கொண்டாடப்படுகிறது.

இதனையடுத்து மறுநாள் அவரது வல்வெட்டித்துறையிலுள்ள இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இடம் பெறும்.

## அருள்நெறிக்கழக வாணிவிழா

(மாவிட்டபுரம்)

மாவை கொல்லங்கலட்டி அருள்நெறிக்கழகம் வாணிவிழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

மாவை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. வ. சரவணமுத்து தலைமையில் நடந்த இவ்விழாவில் செல்வி ஞானச்செல்வி ஞானசேகரத்தின் மாணவிகளது நடன நிகழ்ச்சி சிறப்பு அம்சமாக இருந்தது.

மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடந்தன.

## மின் பாவனையாளருக்கு கஷ்டம்

(நெல்லியடி).

அல்வாய் வடக்கு பகுதியிலுள்ள மாலிசந்தி தொடக்கம் வதிரிவரையுள்ள மின் பாவனையாளர்கள் இரவு நேரங்களில் போதிய மின்னொளி போதாமையால் தமது அலுவல்களைக் கவனிக்கமுடியாது பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். மாணவர்கள் இரவு நேரங்களில் மின்னொளி போதாமையால் கல்வி பயில முடியாதுள்ளனர்.

இப்பகுதியிலுள்ள மின் மாற்றுமூலம் பெருமளவு மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளமையால் இக்கதி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. புதிய மின்மாற்றியை அமைக்குமாறு பொதுமக்கள் பட்டின சபையைக் கோரியுள்ளனர்.

## நாடுதிரும்பியதும் கைது!

(மாவிட்டபுரம்)

பிடிவிறுந்து பிறப்பிக்கப்பட்டு 2 வருடங்களின் பின் கைதான நபர் ஒருவர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் 2,500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

உடுவில் டச்சுறோட்டைச் சேர்ந்த சி. நாகேஸ்வரி என்னும் இளம்பெண்ணை ஏழாலையைச் சேர்ந்த சி. மகேஸ்வரன் என்பவரிடமிருந்து அவர் மூலம் தமக்குப்பிறந்த பெண் குழந்தைக்கு தாபரிப்புக் கோரி வழக்கொன்றை மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தில் சமூகமளிக்கத் தவறியதால் இந்நபருக்கு பிடிவிறுந்து பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவர் சவூதி அரேபியாவுக்கு தொழில் பார்ப்பதற்காக சென்றிருந்தாராம். 2 வருடங்களின் பின்னில் நாடுதிரும்பிய இவரை சுன்னாகம் பொலிசார் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். அச்சமயம் நீதிபதி திரு. சி. ஆர். இராஜசிங்கம் அவரை 2500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

இதுபோன்று மேலும் பல்வேறு வழக்குகளின் சம்பந்தப்பட்ட நபர்கள் வெளிநாடு சென்றுவிட்டதால் பல வழக்குகள் விசாரணை செய்யமுடியாத நிலையில் மல்லாகம் நீதிமன்றத்தில் இருந்துவருகிறன.

மேற்படி நபர்கள் மீது பிடிவிறுந்து பிறப்பிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் இங்கு எப்போது வருவார்கள் என எ.ஏ பொலிசார் கண்காணித்து வருகிறார்கள்.


# மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்டில் உங்கள் சேமிப்பினை முதலிடும்போது நீங்கள் அடையும் நன்மைகள் பலவிதம்

மொத்த ஆதனம் ரூபா 25 கோடிகளுக்கும் மேலாகக்கொண்டு
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் இலங்கையின் மிகப்பெரிய நிதி நிறுவனமாக விளங்குகிறது.
மூலதன ஒதுக்கீடுகளும் முன் ஏற்பாடுகளுமாக ரூபா 3 கோடிக்கும் கூடுதலாகக் கொண்ட
உறுதியான நிதி நிறுவனம் மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்,
தனியார் வைப்புக் கணக்காக 15 கோடிக்கும் அதிகமாகத் தன்னகத்தே கொண்டு
பொது மக்களின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமாகத் திகழும் நிறுவனம்
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்.
உங்கள் வசதிக்கேற்ற வகையில் தெரிவு செய்ய வல்ல முதலீட்டு திட்டங்கள்.
மாதாந்தமோ அல்லது முதிர்ச்சியின் பின்னரோ பெறக் கூடிய கவர்ச்சிகரமான வருமானம்.

## ஒருவருடவைப்புத் திட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| மாதாந்தம் செலுத்தப்படுவது | 20% வருட வருமானம் | முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுவது | 22% வருட வருமானம் |

அதி குறைந்த வைப்புத் தொகை ரூபா 2,500/-

## இரு வருடவைப்புத் திட்டங்கள்

| மாதாந்தம் செலுத்தப்படுவது | | முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுவது | |
|---|---|---|---|
| ரூபா 2,500/-ல் இருந்து ரூபா 50,000/– ற்கும் கீழ் | 21% வருட வருமானம் | ரூபா 2,500/-ல் இருந்து ரூபா 50,000/– ற்கும் கீழ் | 24% வருட வருமானம் |
| ரூபா 50,000/-ல் இருந்து ரூபா 100,000/– ற்கும் கீழ் | 22% வருட வருமானம் | ரூபா 50,000/-ல் இருந்து ரூபா 100,000/– ற்கும் கீழ் | 25% வருட வருமானம் |
| ரூபா 100,000/– ல் இருந்து அதற்கும் மேல் | 24% வருட வருமானம் | ரூபா 100,000/– ல் இருந்து அதற்கும் மேல் | 27% வருட வருமானம் |

## மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்

இலங்கையின் மிகப்பெரியதும் உறுதிவாய்ந்ததுமான நிதி நிறுவனம்.

51-53, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1. தொலைபேசி 26611-19

கிளைகள்:

யாழ்ப்பாணம்: 11/8 ஸ்டான்லி வீதி, தொலைபேசி: 321
மாத்தறை 27-1/1, தர்மபால மாவத்தை தொலைபேசி: 2466
...அனுராதபுரம் 2, ஹரிச்சந்திரா மாவத்த தொலைபேசி: 534
...கண்டி 98/A கொதனை வீதி, தொலைபேசி: 4196

மேலதிக விபரங்களுக்கு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தை நாடவும்.

செயற்துணைவர்கள் (ஏஜன்ட் மார்) எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளனர்.

MASTERS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

பக்தி சாதனைகளில் நீ ஈடுபட்டிருக்கும் பொழுது அவற்றைப் பரிகசிப்பவர் சங்கத்தினின்றும் விலகியிருப்பாயாக. தார்மிகப் பற்றையும் தார்மிகப் பற்றுடையோரையும் கேலிபண்ணுவோரிடம் விலகியிருப்பாயாக.

— ஸ்ரீராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

## அத்தியாவசியப் பொருள் விநியோகம்

தனியார் வர்த்தகர்களுக்குத் தேவயான அளவு அரிசி, சீனி, மா ஆகியவற்றை உணவு இலாகாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் இவற்றைப் பாவனையாளர்கள் தட்டுப்பாடின்றிப் பெற்றுக்கொள்ளும் வகையில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் உணவு கூட்டுறத்துறை அமைச்சு தெரிவித்திருக்கிறது.

இது நல்ல செய்திதான். ஆனல் இதுகாலவரை உணவு இலாகா இறக்குமதி செய்யும் அரிசி, சீனி, மா ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தனியார் வர்த்தகர்களுக்குக் கிடைக்கவில்லையாஎன்பதும் அவர்கள் இவற்றை விற்பனை செய்யவில்லையா என்பதும் கேள்விக்குரிய விஷயமல்ல!

என்றலும் இந்தப் பொருள்கள் கூடுதல் விலைக்குத் தனியார் வர்த்தகர்கள் விற்றுவருகையில் ஏன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை யென்பதே கேள்வி.

கூட்டுறவுச் சங்கங்களிலும் உணவு இலாகாப் பண்டசாலைகளிலும் விநியோகிப்பதற்காக வழங்கப்படும் பொருள்கள் தனியார் வர்த்தகர்களிடம் தாராளமாகக் கிடைக்கும் சமயங்களில் சங்கக் கடைகளிலும் உணவு இலாகாப் பண்டசாலைகளிலும் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான காரணம் என்னவென்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுத்திருந்தால் அத்தியாவசிய உணவுப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு அடிக்கடி ஏற்படுவதற்கு நியாயமிருந்திருக்காது.

பங்கீட்டுப் பொருள்கள் பகிரங்கமாகச் சந்தைகளிலும் தனியாரிடமும் கூடுதல் விலைக்குப் பெறக்கூடிய சந்தர்ப்பங்களில உணவுக் கட்டுப் பாட்டதிகாரிகளும் உணவு இலாகா அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பது பாவனையாளர்களுக்குத் தேவையான அத்தியாசிய உணவுப் பொருள்கள் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதுடன் ஊழல் மோசடிகளை ஒழிக்கவும் வழிபிறக்கும்.

இறக்குமதிப் பொருள்களுக்கு மட்டுமல்ல உள்ளூரில் உற்பத்தியாகும் அத்தியாவசிய உணவுப்பொருள்களுக்கும் விலை நிர்ணயிக்கப்பட்டு அதைச்சரியான முறையில் செயற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

சில வர்த்தகர்கள்தான் அத்தியாவசிய உணவுத்தட்டுப்பாட்டை ஏற்படுத்துகிறர்களென்று கூறுவதை ஏற்றுக்கொள்வது நியாயமாகாது.

உலகச்சந்தை நிலைபர்றிச் சில பொறுப்புள்ளவர்கள் பகிரங்கமாகத் தெரிவிக்கும் கருத்துக்கள் வர்த்தகர்களை பதுக்கலுக்கு முன்னேற்பாடு செய்வதற்கு வழிவகுக்கின்றதென்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பொதுவாக அரசாங்கம் இறக்குமதி செய்யும் அத்தியாவசியப் பொருள்கள் சரியான முறையில் விநியோகம் செய்யப்படுவதுடன் அவை நேர்மையான முறையில் பொதுமக்களுக்குக் கிடைக்கின்றனவா என்பதையும் அரசு விழிப்புடன் கண்காணிப்பது அவசியமாகும்.

# யாழ்ப்பாணத்தில் நூலகவியற்கல்வி

**சிவனேயா ஜீவன் பி.ஏ/ஏ.எல்.ஏ.(லண்டன்)**

(விரிவுரையாளர், இலங்கை நூலகச் சங்கம்)

மூன்றும் உலக நாடுகளின் சமூக பொருளாதார வளர்ச்சிப் போக்கும் வேகமும் அந்நாடுகளில் அமைந்துள்ள நூலகச்சேவைகள், தகவற் சேவைகள், ஆவணவாக்கச் சேவைகள் முதலியவற்றிலும் தங்கியுள்ளதென பலசர்வதேச கருத்தரங்குகளிலும், மாநாடுகளிலும் அழுத்தமாக எடுத்துரைக்கப்பட்டிருப்பது மட்டுமன்றி இத்தகையநாடுகளுக்கு தனிப்பட்ட முறையில் இதனுடன் தொடர்புடைய யுனெஸ்கோ உட்பட பலஉலக நிறுவனங்கள் அறிவுறுத்தியுமிருக்கின்றன. உடனடிப் பொருளாதார நன்மையைப் பயக்குகின்ற நடவடிக்கைகளிலேயே ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் கவனம் செலுத்துகின்றனவேதவிர நெடுங்காலத்தில் பயனளிக்கும் நூலகச் சேவைகள் போன்ற துறைகளை அபிவிருத்தி செம்வதற்கான ஆக்கபூர்வ செயல்களில் இவ் அரசாங்கங்கள் ஈடுபடாமலிருப்பதை அநேகமாக எல்லா வளர்முக நாடுகளிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. நாட்டு மக்களின் வாசிப்புப் பழக்கத்திற்கும்," கல்விவளர்ச்சிக்கும் எட்போதும் உறுதுணையாக இருப்பது அந்நாட்டின் நூலகச்சேவையாகும், கல்வியிலும் எழுத்தறிவிலும் மேல் நிலையடைந்துள்ள பல மூன்றும் உலக நாடுகளில் நூலகச் சேவை தாழ்ந்த நிலையிலேயே இருக்கின்றது. எழுத்தறிவில் ஆசியாவிலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ள இலங்கையிற்கூட நூலகவளர்ச்சி மந்தநிலையிலேயே இருந்துவருகிறது. சென்றஇருபத்தைந்து ஆண்டுகளில் இந்நாட்டின் கல்வித்துறையில் பல புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் அதே அளவுச்கு நூலகவளர்ச்சியில் மாற்றங்களோ, முன்னேறறங்ளோ ஏற்படவில்லை. கல்வியையே பாரம்பரியமாகக் கொண்ட யாழ்ப்பாணப் பிரதேசத்திலேயே நூலகங்களும் நூலக சேவைகளும் மிகவும் வளர்ச்சி குன்றிய நிலையிலிருப்பது இப்பிரதேசத்தின் எதிர்கால கல்வி. கலாச்சார, சமூக பொருளாதார வளர்ச்சிக்குப் பாதகமாகவே அமையும்.

ஒரு நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தின் நூலக வளர்ச்சி குன்றியிருப்பதற்கான அடிப்படைக்காரணிகளில் ஒன்று பயிற்றப்பட்ட நூலகர்கள் இல்லாமையாகும். இலங்கையின் நூலகஅமைப்புமுறையை 1960ம் ஆண்டு ஆம்வுசெய்த யுனெஸ்கோ நிபுணரான ஹெரால்ட் பொனியின் அறிக்கை மாத்திரமன்றிஇலங்கையில் அவ்வப்போது நடந்தேறிய சர்வதேச மாநாட்டு தீர்மானங்கள் கூட நூலகவியற் பயிற்சியின் முக்கியத்துவத்தை ஆணித்தரமாக எடுத்துரைதுள்ளன. உதாரணமாக 1967ம் ஆண்டு மார்கழிமாதம் யுனெஸ்கோ நிறுவனத்தின் ஆதரவில் கொழும்பில் நடைபெற்ற "ஆசிய நூலகசேவைகளின் தேசியத்திட்ட நிபுணர்களின் கூட்டம்" நூலகவியற் கல்விக்கு முதலிடம்கொடுத்து கீழ்க்காணும் தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றியது.

1. நூலக அபிவிருத்தி நடவடிக்கைகளில் நூலகவியற் கல்விக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டும்.

2. நூலகவியற் கல்விக்குத் தேவையான வசதிகள் உள்நாட்டில் அல்லது ஒரு பிராந்தியத்தில் செய்துகொடுக்கப்படவேண்டும்.

3. உள்நாட்டில் நூலகப் பயிற்சித்திட்டங்கள் இல்லாவிடத்து வெளிநாட்டில் பயிற்சிபெறுவதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படவேண்டும். நூலகத்துறையில் சமீபகாலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் அறிவதற்கும் வெளிநாடுகளில் இது தொடர்பாக என்ன நடைபெறுகின்றன என்பதை அறிவதற்கும் அனுபவமிக்க உள்நாட்டு நூலகர்கள் அவசியமாக வெளிநாடுகளுக்கு எவ்வாருயினும் அனுப்பப்படல்வேண்டும்.

4. உள்நாட்டில் நூலகப் பயிற்சிக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படுமிடத்து எண்ணிக்கையைவிடத் தரத்திற்கே முதலிடம் கொடுக்கப்படவேண்டும்.

5. சர்வதேச நிறுவனங்களின் உதவியோடு நூலகவியல், தகவலியல், ஆவணவாக்கவியல் முதலியவற்றிற்கான பயிற்சி நிறுவனங்கள் பிராந்திய மட்டத்தில் ஸ்தாபிக்கப்படவேண்டும். இந்நிறுவனங்கள் நூலக ஏபிவிருத்திப் பிரச்சினைகள் பற்றி ஆராய்ச்சி நடத்தவும், நூலபயிற்சி நிறுவனங்களை அப்பிராந்தியத்தில் அமைக்கவும், முன்னேற்றவும் உதவவேண்டும் நூலகவியற் பயிற்சிகளுக்குப் பயனளிக்கும் வகையில் தேவையின் பொருட்டு உள்நாட்டு மொழிகளில் நூலக விஞ்ஞான நூல்களைவெளியிடவேண்டும்.

6. அனுபவங்களையும், கருத்துக்களையும் பரிமாறிக்கொள்வதற்காக சிரேஷ்ட நூலகளுக்கென கருத்தரங்குகள் பிராந்திய மட்டத்தில் நடத்தப்படவேண்டும்.

7. முழுநேர நூலகக் கல்வியைப் பெற வசதியற்ற நூலகர்களுக்கென அப்பிராந்தியத்தில் தபால்மூல நூலகப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

இலங்கையில் 1950-ம்ஆண்டு முதல் அவ்வப்போது நூலகப் பயிற்சி வகுப்புகளையும்,சேவைகாலப் பயிற்சி நெறிகளையும் கொழும்பு பொதுசன நூலகம், பிரிட்டிஷ் கவுன்ஸில், அமெரிக்க கலாச்சார நிலயம், இலங்கை விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சி நிலையம் போன்ற நிறுவனங்கள் நடத்தி வந்தபோதிலும் ஒழுங்காகத் திட்டமிடப்பட்ட நூலகவியற் கல்வி முறை 1960-ம் ஆண்டிற்குப் பின்பே இலங்கையில் மேற்கொளளப்பட்டதெனலாம். இத்தகைய பாடநெறிகளை நான்கு தகுதியுள்ள நிறுவனங்கள் மேற்கொண்டிருப்பதுடன் இவற்றுள் சில மேலும் முறையாக இக்கல்வியை நடாத்திவருகின்றன. இலங்கை நூலகச் சங்கம், இலங்கைத் தேசிய நூலகச் சேவைகள் சபை, கல்வி அமைச்சு, இலங்கைப் பல்கலைக்கழகம் முதலிய நான்கு நிறுவனங்களும் மேற்கொண்ட நூலகக் கல்வி நடவடக்கைகளின் தாக்கத்தை யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் காணக்கூடியதாக இருந்தது, இருக்கின்றது. இவற்றில் இலங்கை நூலகச் சங்கமே முழுமூச்சுடன் நூலகவியற் கல்வியைத் தற்போது மேற்கொண்டுவருகின்றது.

(தொடரும்)

# சூராவத்தை ஸ்ரீமுத்துமாரிஅம்மன் சித்திரத்தேர் வெள்ளோட்டம்

ஏழு ஆலயங்களால் அலங்கரிக்கப்பெற்று விளங்கும் ஏழாலைக் கிராமத்தின் தென்பகுதி சூராவத்தை. இப்பகுதி சுன்னுகம் நகரத்திற்கு அண்மையிலுள்ளது. இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமுத்துமாரி அம்மன் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா 23-10-80 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சிறப்பாக நடைபெறவிருக்கின்றது.

வேண்டுவார் வேண்டுவதை வேண்டியபடி வாரி வழங்கும் அம்பாளின் ஆலயம் இற்றைக்கு 150 ஆண்டுகட்கு முன் தோற்றியதாக இக்கிராமப் பெரியோர்கள் கூறுகின்றூர்கள். அம்பாள் இங்கு எழுந்தருளிய சரித்திரத்தைப் பெரியோர்கள் பக்திரசத்துடன் கூறும் போது கேட்பதற்கு மிகவும் இனிமையாகவும், அம்பாள் எம்முன் தோன்றிக் காட்சி தருவதும் போலிருக்கும். அன்று சிறப்புடன் வாழ்ந்து வந்த திரு. சின்னத்தம்பி என்பவரின் மனைவியான வள்ளிநாச்சியார் என்பவர் பனம் வடலிகளால் நிரம்பப்பெற்ற புன்னை என வழங்கப் பெறும் வளவினூடாகச் சுன்னுகம் சென்று வருவாராம். ஒருநாள் இவ்வளவினூடாக அவர் செல்லும் போது அம்பாள் அவரை வழிமறித்து "நீ நல்ல ஒரு வீடு அமைத்து அதில் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிருய், ஆனல் நானே இந்த வடலிக் கூடலுக்குள் வெய்யிலிலும் மழையிலும் நனைந்து கொண்டிருக்கின்றேன் இது உங்களுக்குத் தெரியவில்லையா?', என்று கேட்டாராம். இவ் எதிர்பாராத சம்பவத்தால் வள்ளிநாச்சியார் திகிலடைந்து நின்றபோது அம்பாள் மறைந்துவிட்டாராம். வள்ளிநாச்சியார் தன்பயணத்தை தொடர்ந்து மேற்கொள்ளாது வீட்டிற்கு வந்து தனது மகன் சுப்பிரமணியத்திற்கு இப்பரவசமூட்டும் செய்தியைக் கூறியதுடன் அம்பாள் காட்சி கொடுத்த இடத்தில் அழகான மடாலயம் ஒன்றை நிறுவி அம்பாளுக்கு கிரமமாகப் பொங்கலும் பூசைகளும் செய்து வந்ததுடன் கந்தப் புராணமும் பராயணம் செய்து வந்தார்கள் எனக் கூறிப் பெரியோர்கள் பரவசமடைகின்றனர்.

அம்பாள் எழுந்தருளியிருந்த மடாலயத்தை ஒரு சிறந்த ஆலயமாக ஆகம முறைப்படி ஆக்கி அமைக்க வேண்டுமென இவ்வூர் மக்கள் விரும்பி அப்பாரிய பொறுப்பை செயல் படுத்துவதற்கு காலஞ்சென்ற உயர் திரு. மு. தம்பிர்பிள்ளை அவர்களை ஆலயத்தின் முகாமையாளராக ஏகமனதாக நியமித்தனர். அம்பாள் அடியார் வழங்கிய பேருதவியுடன் இப்பெரியார் ஆலயத்தை புனருத்தாரணம் செய்யும் பெருந்தொண்டில்அயராது உழைத்து வந்தார். அன்னரின் அரும் பெருஞ் சேவையால், ஆலய வேலைகள் முற்றுப் பெற்றதும் 1928-ம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. தன்னலமற்ற சேவையால் சிறந்த ஒரு ஆலயத்தை ஊர்மக்களின் உ வியுடன் ஆக்கித்தந்த அப்பெருமகனுரை இவ்வூர் மக்கள் இன்றும் நினைவு கூர்ந்த வண்ணமேயிருக்கின்றுர்கள். பிற்காலத்தில் ஆலயத்திற்கென ஒரு தர்மகர்த்தாச் சபை உருவாக்கப்பெற்றதும், இப்பெருமகனுர் ஆலயப்பொறுப்பு முழுவதையும் இச்சபையிடம் ஒப்படைத்த போதும், அம்பாளுக்குச் செய்யவேண்டிய தொண்டுகள் யாவையும் தனது இறுதிக்காலம் வரை

(5ம் பக்கம் பார்க்க)

**— பொ கந்தசாமி —**

(கௌரவ செயலாளர், ஸ்ரீமுத்துமாரிஅம்மன் ஆலய தர்மகர்த்தாச்சபை)

## மக்கள் கருத்து

### நவீன சந்தையில் மலசலகூடம்

யாழ். பஸ் நிலையத்தில் இருந்த மலசலகூடம் அகற்றப்பட்ட பின்தற்போதுபுதியமார் கட்கட்டிடத்தில்அமைக்கப்பட்டுள்ளது. இது கடைகளுடன் சேர்ந்திருப்பதினல் பொது மக்களுக்கு இலகுவாகக் கண்டு கொள்வதற்குச் சிரமமாய் இருக்கிறது. அதோடு ஒரு குறிப்பிட்ட நேரம் மட்டும்தான் திறந்து வைக்கப்படுகிறது. இந்த நகரிலே குறிப்பிட்ட நேரம் மட்டும்தான் மலசலகூட வசதியென்ருல் மிகுதி நேரத்தில் எங்கு செல்வது? இந்த அவசரகாரியத்தை குறிப்பிட்ட நேரத்திற்கிடையில் மட்டும் செய்யமுடியுமா? அதுவும் மாரிகாலத்தில் ஏற்படும் அவசரத்தை சொல்லித் தெரிய வேண்டியதில்லையே. மலசலகூடம் பூட்டப்பட்டபின் ஆண்கள் சுவர் ஓரங்களை நாடி நிற்கின்றனர். பெண்கள் என்ன செய்ய முடியும். அதிகாரிகள் இதுபற்றி ஏன் சிந்திக்கவில்லை?

அடுத்து, நவீன சந்தையில் பெண்களுக்கென அமைக்கப்பட்டுள்ள மலசலகூடங்கள் பூட்டப்பட்டுள்ளன. தேவைப் படுவோர் அதிற்குரிய திறப்பை கந்தோரில் வாங்கும்படி எழுதப்பட்டுள்ளது. அதனுள் ஆண்களும் புகுந்து விடுவார்கள் என்பதற்காகப் [illegible] [illegible] கான கூடங்கள் கடைக்கு எதிராக அமைந்திருப்பதினல் திறப்பு வாங்கித் திறந்து உள்ளே போவதற்குப் பெண்கள் - குறிப்பாக இளம்பெண்கள் எவ்வளவு மனவேதனைப் படவேண்டியுள்ளது. எதிர்க் கடையில் உள்ளோர் கண்ணிமைக்காமல், எலியைப் பார்க்கின்ற பூனைபோல உன்னிப்பாக பார்த்துக் கொள்கின்றனர். அதோடு மெல்லிய செருமலும் போடுகிறுர்கள். இந்நிலைமையை மாநகரசபையினர் யோசிக்கவில்லையே, அகவே நவீன சந்தையில் உள்ள பெண்களுக்கான மலசலகூடங்களை எதிரில் கடை [illegible] இல்லாத இடங்களுக்கு விரைவாக மாற்றியமைக்க வேண்டும்.

ஈழநாடு ஆதரவாளன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## "எனது அமைச்சு பற்றி பெருமைகொள்கிறேன்"

**- அமைச்சர் இராசதுரை**

(மட்டக்களப்பு)

எனது அமைச்சர் பதவி பழையதல்ல. புதிய பதவியாகும். இலங்கைச் சரித்திரத்தில் எவருக்கும் கிடையாத பெரும் பாக்கியம் எனக்கு இப்பதவியை வகிப்பதால் கிடைத்துள்ளது. தமிழ்ப் பகுதி அபிவிருத்திக்காகவும், தமிழ் மொழி அமுல்செய்வதற்கும், இந்துசமய நடவடிக்கையை விஸ்தரிப்பதற்காகவுமே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பாரிய உயர்பதவியை இறைவன் இரக்கம், ஆண்டவன் அன்பு, கடவுள் கருணை, தெய்வத்தின் துணை என்பவற்றுடன் சிறந்தமுறையில் வழிநடத்தி வருகின்றேன். இப் பதவி வகிப்பதினை நான் பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன்,

இவ்வாறு கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு தொகுதி கிரான்குளத்தில் வீடமைப்புத்திட்டம்; பாடசாலை ஆகியவற்றிற்கான அத்திவாரக்கல்லைநாட்டிவைத்தைத் தொடர்ந்து வண்ணக்கர் திரு. க. தம்பிமுத்து தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

எமது பகுதிகட்கு பல தேவைகள் உள்ளன. தேவைகளைப் பெறுவது கஷ்டமான காரியமல்ல. அத் தேவை என்னவென்பதை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும்.

தமிழ்ப்பகுதி அபிவிருத்தி என்னவென்பதை நான் கடந்த முப்பது வருடங்களாக தமிழ் மக்களுடன் நெருங்கிப் பழகியகாலங்களில் அறிந்துள்ளேன். அவற்றை நிறைவேற்றி தமிழ்ப்பகுதிகளில் பல அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக சத்துருகொண்டான் மகளிர்பண்ணை, கைத்தொழிற்பேட்டை,முழுங்கால் நீர்பாசனதிட்டம் உட்பட பல திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்மொழி அலுவல்விடயத்தில் கடந்த இருபது வருடகாலமாக தீர்க்கப்படாத தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்னையை எனது தலைமையிலான அமைச்சரவை உபகுழு தீர்த்துவைத்துள்ளது.

இந்துசமய விவகாரத்தில் முதல்முதலாக மொரிஷியஸ் நாட்டிற்கு சைவஆலயத்தில் பூசைசெய்ய பூசகரை அனுப்பியுள்ளது. திருக்கேதீச்சரத்தில் சிவாச்சாரியார் பாடசாலை, கதிர்காமத்தில் இலங்கை வங்கிக்கு அருகில் இந்து யாத்திரிகர் மடம், ஆறுமுகநாவலர், விபுலானந்தர் மணிமண்டபம், இவைகள் யாவும் புதிதாக உருவாக்கப்பட்ட எனது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட குறுகிய காலத்திட்டங்களாகும்.

இவ்வைபவத்தில் ஆலய பரிபாலன சபை தலைவர் திரு. ஆர். . குமாரசாமி, கிராம சபை உறுப்பினர் திரு. எஸ். குழந்தைவேல், உதவி அரசாங்க அதிபர்களான திரு. சாம்பசிவ ஐயர், திரு. எம். செல்வரத்தினம், திரு. ஏ.அந்தோனிமுத்து உட்படப்பலர் உரையாற்றினர்.

## மூலப் பொருள் வழங்கும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்பு தொகுதி அபிவிருத்தியில் துரித கவனமெடுத்துவரும் இலங்கை றெட்பாணா நிறுவனம் பெரிய பொரதீவு கிராமத்தில் உலோகத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான மூலப் பொருட்களை வழங்க முன்வந்துள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை நிறுவனத்தின் பொறுப்பாளர் திரு. எஸ். சோதிராஜா மேற்கொண்டு வருகின்றார்.

## சூராவத்தை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் செய்து வந்தார்.

ஆண்டுசள்தோறும் பத்து நாட்கள் அலங்கார உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. இவற்றுடன் தனி உற்சவங்களும் நடைபெற்றுவருகின்றன. அலங்கார உற்சவங்களை மகா உற்சவங்களாக மாற்றி அமைத்து தேர்த் திருவிழாவும் நடாத்த வேண்டுமென பக்தர்கள் ஆவலுடன் பணியாற்றி வந்தார்கள். இவர்களுடைய அவல் காலத்திற்குக் காலம் தடைப்பெற்று வந்தபோதிலும், இவ்வாண்டுதான் அதற்கு அம்பாள் திருவருள் கிடைத்தது. இவ்வூர் மக்களும், அயல் ஊர்களில் வாழும் மக்களும், பிறநாடுகளில் வாழ்ந்து வரும் இவ்வூர் மக்களும் மனமுவந்து வழங்கிய நிதியுதவியால் சிறந்த ஒரு சித்திரத்தேரை இலட்ச ரூபா செலவில் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய தர்மகர்த்தாச்சபை அமைத்து வெள்ளோட்ட விழாவை நாளை வியாழக்கிழமை சிறப்பாக நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்து வருகின்றது. இச்சித்திரத்தேரை திருநெல்வேலி சிற்பகலாமணி திரு. க. செல்வராசா அவர்கள் நிர்மாணித்து அமைத்துத் தந்துள்ளார். இளம் வயதிலேயே கலைத்துறையில் அதிக திறமையும் ஆர்வமும் உள்ள திரு. செல்வராசா அவர்களின் அயரா உழைப்பினால் மிகக்குறுகிய காலத்தில் உருவான அம்பாளின் அழகிய தேரில் அவர் கைவண்ணத்தைக் கண்டு களிக்க முடியும்.

## இளைஞர் சமுதாயமே இனத்தின் ஜீவநாடி

(யாழ்ப்பாணம்)

இளைஞர் சமுதாயம் தான் ஒரு இனத்தின் ஜீவநாடி. இளைஞர்களின் முயற்சியினால் தான் இங்கு பல நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன. இந்த இளைஞர்களின் முயற்சி தொடர்ந்து வெற்றி பெற வேண்டும்.

மேற்கண்டவாறு அண்ணை தி. மு. க. அமைப்புச் செயலாளர் திரு. பொன். மதிமுகராசா தாவடி மேற்கு காளி அம்மன் சனசமூக நிலையத்தின் வாணி விழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது!

நாடகத்தின் மூலம் மக்களுக்கு சிறந்த கருத்துக்களை எடுத்துக் கூறி சமுதாய இனப் பிரச்னைகளிலிருந்து விடுதலை பெறச் செய்ய வேண்டுமென்றார்.

இவ்விழாவில் மூன்று நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

## ஆசிரியர் பணியின் குறிக்கோள் என்ன?

### கத்தோலிக்க ஆசிரியருக்கான கருத்தரங்கில் விளக்கம்

(நெல்லியடி)

''மாணவர்களின் உள்ளத்தை அறிந்தும்; அவர்களின் கல்வித் தேவைகளை அறிந்தும் அவற்றினை நிலைநிறுத்துவதே ஆசியப்பணியின் குறிக்கோளாகும். கல்வி என்பது கல்லுதல் என்ற தொழிற்பெயரை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது என்பது தொன்னூலார் கண்ட பேருண்மையாகும்''.

மேற்கண்டவாறு இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கனே ஒருநாள் கருத்தரங்கில் பேசிய அருட்திரு ஜெரால்ட் ரொயிசாரோ குறிப்பிட்டார்.

யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக் கருத்தரங்கில் சங்கப் பொதுச் செயலாளர் திரு. சி. வின்சென்ற் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசியதாவது:

'கல்வி வெள்ளை அறிக்கை மூலம் சமயபாடம் கட்டாய பாடமாக்கப்படும் பட்சத்தில் கத்தோலிக்க சமயத்தைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கு தேவை ஏற்படும்அந்த சந்தர்ப்பத்தில் கல்வி அமைச்சுவரை சென்று கத்தோலிக்க ஆசிரியர் நியமனத்திற்காக சங்கம் போராடும்' என்றார்.

சுமார் 42 ஆசிரியர்கள் கலந்துகொண்ட இ கருத்தரங்கில் புதிய யுத்திகள் மூலம் ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. வினாவிடை மூலம் ஆசிரியர்கள் தனியாகவும், குழுக்களாகவும், ஒருமித்தும் ஆய்வுகள் நடத்தினர்கள்.

## சன்மார்க்க சபையின் புதிய நிர்வாகிகள்

(குரும்பசிட்டி)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் 46 வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். போஷகர்கள் ஏ. ரி. பொன்னுத்துரை, த. இராசரத்தினம்,தலைவர்சி. நடராஜா, உப தலைவர்: வ.கிருஸ்ணசாமி, பொதுச் செயலாளர்: க. ஸ்கந்தமூர்த்தி, இணை செயலாளர்கள்: ம. ஸ்ரீதரன், இ. விக்கினேஸ்வர மூர்த்தி, பொருளாளர்: க. சிவதாசன். நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது!

பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டிகள், கருத்தரங்குகள்' சமயப்பிரசங்கங்கள் என்பவற்றை வழமைபோல் நடத்துவதென்று தீர்மானிக்கப் பெற்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மாணவர்களின் நல்லாற்றலை வளர்ப்பதே பாடசாலைகளின் குறிக்கோளாகும்"

## நீர்வேலி இந்து அதிபர் உரை

(நெல்லியடி)

மாணவர்களுக்கு நல்லாற்றல்கள் உண்டு. அவற்றினை மேலும் வளர்ப்பதே பாடசாலைகளின் குறிக்கோளாக இருக்கவேண்டும். மாணவர்களையும், சமூகத்தையும் மையமாக வைத்தே கல்வி போதிக்கப்படுகின்றது. இக்குறிக்கோளை நிறைவேற்ற பாடசாலைகளும், சமூகமும், பெற்றோரும் தொழிற்படவேண்டும்,

மேற்கண்டவாறு நீர்வேலி இந்துக் கல்லூரி அதிபர் திரு. கே. இராசரட்ணம், பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவிலும், ஸ்தாபகர் நினைவு விழாவிலும் உரையாற்றுகையில் தெரிவித்திருந்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசியபோது தெரிவித்ததாவது:

'மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர அமைதியான சமூக சூழ்நிலைவேண்டும். ஒரு சமூகம் செய்யும் செயல்கள் மாணவர்களுக்கு உகந்ததா என எண்ணிப் பார்க்கவேண்டும். ஒழுக்கம் மாணவர்களை தன்னம்பிக்கையுடனும், அகமகிழ்ச்சியுடனும் வளர்வதற்கும் தனது திறமைகளைக்காட்டவும் உதவி புரிகின்றது.

அதிக மாணவர்கள் இன்று கல்விபயில விரும்புகின்றார்கள், இலவசப் பாடப்புத்தக விநியோகங்கள் மாணவர்களை கல்வி பயிலுவதற்குத் தூண்டுகோலாக அமைந்துள்ளது. இக்காலகட்டத்தில் சுவர்களற்ற பாடசாலைகளும், திறந்த வெளிப் பல்கலைக்கழகங்களும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது' என்றார்.

யாழ். கல்வித்திணைக்கள கல்வி அதிகாரி திரு. கே. நவரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். திருமதி இ. நவரட்ணம் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். திரு. கே. எஸ். பொன்னுத்துரை ஸ்தாபகர் நினைவு நாள் பேருரை நிகழ்த்தினார்.

# குருநகர்சீ-நோர்வலைதொழிற்சாலைக்கு இயந்திரங்கள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலைக்கு மூன்று இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. சீநோர் அபிவிருத்தித் திட்டத்தால் வழங்கப்பட்ட மேற்படி மூன்று இயந்திரங்களையும் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் குருநகர் சீநோர் தொழிற்சாலைக்குக் கையளித்துள்ளார். இவ்வைபவத்தில் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும் கலந்து கொண்டார்.

இரண்டு வலைபின்னும் இயந்திரங்களும் அவற்றை இயக்கும் இயந்திரம் ஒன்றுமே மாவட்ட அமைச்சரினால் இத்தொழிற்சாலைக்கு கையளிக்கப்பட்டதாகும்.

இவ் இயந்திரங்கள் இணைக்கப்பட்டதும் மேலும் ஐம்பது இளைஞர்களுக்கு இங்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும். (கொ)

## குடத்தனைக்கு மரணவிசாரணை அதிகாரி

(நெல்லியடி)

பருத்தித்துறை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த குடத்தனைப் பகுதிக்கு புதிய மரணவிசாரணை அதிகாரியொருவரை நியமிக்க, யாழ். அரசாங்க அதிபரும், மாவட்ட அமைச்சின் செயலாளருமான திரு. யோகேந்திராதுரைசுவாமி நடவடிக்கை எடுத்துள்ளார்.

புதிய மரணவிசாரணை அதிகாரி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அண்மையில் இப்பகுதியில் நடைபெற்ற நடமாடும் அரசாங்க செயலகத்தில் இப்பகுதியிலுள்ள பொதுமக்களும், சங்கங்களும் விடுத்த கோரிக்கையை அடுத்தே இப் புதிய மரணவிசாரணை அதிகாரியை நியமிக்க அரசாங்க அதிபர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

## பஸ் நிலையத்தில் வாணி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை நவராத்திரி விழா விமரிசையாக நடைபெற்றது. நவராத்திரியின் மகிமை பற்றிவட பிராந்திய போக்குவரத்துச் சபை செயலாற்றுப் பகுதி முகாமையாளர் திரு. கே. நாகரத்தினம் உரையாற்றினார். பஸ் நிலைய ஊழியர்கள் பஜனை செய்தனர்.

## புதிய இயக்குநர்கள் தேர்வு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ப. நே. கூ. சங்கத்தின் இயக்குநர்களைத் தெரிவு செய்வதற்கான இரண்டாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் மார்கழி மாதம் 20ம் திகதி நடைபெறவுள்ளது, இதற்கான ஏற்பாடுகளை சங்கத் தலைவர் திரு. நா. சிவராசசிங்கம் கவனித்து வருகிறார்.

## விவசாயக் கடன் அறவிடப்படுகின்றது

(நெல்லியடி)

உடுப்பிட்டி, பருத்தித்துறை ஆகிய தேர்தல் தொகுதிகளிலுள்ள விவசாயிகள்கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட விவசாயக் கடன்கள் அறவிடப்பட்டு வரப்படுகின்றது. பருத்தித்துறை நீதிமன்றப் மூலம் கடந்தசெப்டம்பர் மாதம் சுமார் 31 ஆயிரம் ரூபா விவசாயக் கடன் அறவிடப்பட்டது.

கூட்டுறவுத் திணைக்களம் நீதிமன்றத்தில் வழக்குகளைத்தாக்கல் செய்து விவசாயக் கடன்களை அறவிடுவதில் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

## தொலைபேசி இணைப்பு

(புங்குடுதீவு)

ஊரதீவு உப தபாற் கந்தோருக்கு தொலைபேசி வசதிகிடைத்துள்ளது. இத்தொலைபேசி இணைப்பை யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பித்துவைத்தார்.

## மக்கள் கடை இடமாற்றம்

(நெல்லியடி)

வல்வெட்டித்துறை ஆதி கோயிலடியிலிருந்த விற்பனை அபிவிருத்தித் திணைக்கள மக்கள் கடை; வல்வெட்டித்துறை சந்திக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளது.

வல்வை நகரபிதா திரு. ச. ஞானமூர்த்தி எடுத்துக் கொண்ட முயற்சியால் இவ் இடமாற்றம் நடைபெற்றது.

## ரூபா 1 லட்சம் செலவில் புதிய கட்டிடம்

(நெல்லியடி)

பருத்தித்துறை கல்வி வட்டாரத்திலுள்ள உடுத்துறை மகாவித்தியாலயத்தில் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் புதிய கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது,

பருத்தித்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே. துரைரத்தினம் இக் கட்டிடத்தினை நிர்மாணிக்கப் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்திருந்தார்,

## பருத்தித்துறையில் ஐ. நா. தினம்

(நெல்லியடி)

ஐக்கிய நாடுகள்தினம் பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தினரால் கொண்டாடப்படவுள்ளது.

நாளை மறுதினம் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரிமண்டபத்தில் நடைபெறவுள்ள இவ்விழாவில், யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

## கி. மு. சங்க நிர்வாகிகள்

(வேலணை)

வேலணை மேற்கு கிராமமுன்னேற்றச்சங்கத்தின் வருடாந்தக்கூட்டம் வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் தற்காலிகத் தலைவர் திரு, வா. அருணகிரி தலைமையில் நிடைபெற்றபோது பின் வருவோர் புதிய ஆண்டுநிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வா. தவச்செல்வம், உப தலைவர்கள்- ஆ. துரைராசா, எஸ். விகவலிங்கம், செயலாளர்; சி. சாடசிவம், உப செயலாளர்; ஆ. சிவராசா, தனாதிகாரி: செ. கார்த்திகேசு. (க)

## ஒருவருடமாகியும் நியமனம் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஆசிரியர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்று ஒருவருடகாலமாகிவிட்டது. இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை, நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற விண்ணப்பதாரிகள் திண்டாட்டம்.

கடந்தவருடம் அக்டோபர் மாதம் 15-ம், 16-ம், 17-ம் திகதிகளில் மட்டுநகர் முதல் வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை, கல்குடா பாராளுமன்ற உறுப்பினரும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருமான திரு. கே. டபிள்யு. தேவநாயகம் ஆகியோரின் சிபார்சின் பிரகாரம் இருநூறு பேரளவில் மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்திற்கு தராதரப் பத்திரமற்ற உதவி ஆசிரியர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை பிரதம கல்வி அதிகாரி திரு. ஏ. ஜே. சற்குணராஜாவினால் நடாத்தப்பட்டு நிராகரிக்கப்பட்டவர்களைத் தவிர தெரிவு செய்யப்பட்டவர்களிடம் கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், நற்சான்றிதழ் என்பன பெறப்பட்டு அவர்களுக்கான தனிக் கோவையும் தயாரிக்கப்பட்டது. ஏனைய மாவட்டங்களில் இதே நேரத்தில் கலந்து கொண்டவர்களுக்கு அவசரமாக நியமனங்கள் வழங்கப்பட்டன.

## அரசாங்க கட்டிடங்கள் புனரமைப்பு

(நெல்லியடி)

பருத்தித்துறை கட்டிடத் திணைக்கள டிப்போ, அரசாங்கக் கட்டிடங்களை புனரமைப்புச் செய்வதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

செம்பியன்பற்று, வல்வெட்டித்துறைப் பகுதிகளிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளும் பருத்தித்துறை தபாற்கந்தோரும் இத் திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்டுள்ளன. மந்திகை அரசினர் வைத்தியசாலையின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


நெல் விளைச்சல் பெருக நிலையான துணை

ஸ்டாம் F 34

குதிரைவாற்புல், கடுக்கன்புல், சந்தனக் கோரை முதலாம் நெற்களைகளை அறவே ஒழித்துக்கட்ட வல்லது ஸ்டாம் F-34.

3, 4 டீபிஏ கொண்ட ஸ்டாம் F-34 நெல் வயலில் நெல்லுடன் வளரும் சகல புற்கள், கோரைகளையும் அழிக்கும். குறிப்பாக, குதிரை வாற்புல், கடுக்கன் புல், சந்தனக் கோரை, மும்மூட்டுக் கோரை, நெற்சப்பி போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதில் மிகச் சிறந்தது.




சந்தனக் கோரை குதிரைவாற்புல் கடுக்கன்புல்

ஸ்டாம் F 34

உங்கள் நெல் வயலில் ஸ்டாம் F-34 பாவித்தால் விளைச்சல் பெருகி அதிக லாபம் கிடைப்பது உறுதி.

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
ஹேமாஸ் கட்டிடம், பிறிஸ்டல் வீதி, கொழும்பு 1.

TAL 5920

| நிகர அளவு | | சில்லறை விலை |
|---|---|---|
| 3.25 | லீட்டர் கொள்கலம் | ரூ. 260/60 |
| 450 | மி. லீ. போத்தல் | ரூ. 38/75 |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-பத்மினி
விஜயா-நாகேஷ்
பாலாடை

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-15
எங்கம்மா சபதம்

ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

வசூலில் பெரும் சாதனை! 4-வது வெற்றி வாரம்!
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவி கு நன்றி
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா-அசோகன்
மற்றும் பலர் நடித்த
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15, 9-30
THE GAUNTLET

லிடோ (யாழ்நகர்)
Daily at: 10-30am, 2-15pm, 4-45 pm, 7-15 pm, & 9-30 pm
RIVER OF THE GREAT CAYMAN

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
10-30, 2-30, 6-30, 9-45 காட்சிகள்
100-வது வெற்றித்திருநாளை நோக்கி வெற்றிநடைபோடும் "வெள்ளிவிழா" வண்ணச்சித்திரம்.
--- நீயா? ---
இதுவரை லட்சத்துக்கு மேற்பட்ட மாதர்கள் பார்த்து விட்டார்கள். — மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டப்படுகிறார்கள். பார்க்கத் தவறியவர்கள், இன்றே பார்த்து மகிழுங்கள் அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிடாதீர்கள். இன்னும் சில தினங்கள் மட்டுமே!
Next Attraction: "THE DIRTY DOZEN"

# உத்தரபிரதேசத்தில் கலகத்தடுப்பு படைப்பிரிவு அமைக்கப்படும்

## முதலமைச்சர் தகவல்

புதுடில்லி, அக். 21

கலகத்தடுப்பு மற்றும் கொள்ளையிடல் போன்றவற்றைத் தடுப்பதற்கான விசேஷ படைப் பிரிவொன்றை அமைக்க உத்தரபிரதேசஅரசு தீர்மானித்துள்ளது.

முதலில் இந்தப்படையில் 15 பிரிவுகள் இருக்குமென உத்தரபிரதேச முதலமைச்சர் திரு. விஸ்வநாத்பிரதாப்சிங் தெரிவித்தார்.

சகலவித சட்ட மற்றும் ஒழுங்கு நிலைமைகளை சமாளிப்பதற்கு இப்படையினருக்கு விசேட பயிற்சி அளிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். பொருளாதார குற்றவாளிகளை விசேட விசாரணைசெய்வதுபற்றி மாநில அரசு ஆலோசித்துவருவதாகவும் அவர் தெரிவித்தார். (வெ)

# ஐ. நா. சமூக பொருளாதார சபை

நியுயோர்க், அக். 21

ஐக்கியநாடுகள் பொதுச்சபை 1981ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமாகும் சமூக, பொருளாதாரசபையின் மூன்றுண்டுகால பதவிக்காக தேர்ந்தெடுத்த பதினெட்டு நாடுகளில் இந்தியாவும் இடம் பெறுகிறது.

இப்பதவிக்கு பங்களாதேஷ், சீனு, பிஜி போன்ற ஆசிய நாடுகளும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன, (வெ)

# ஜெருசலமை தலைநகரமாக்கும் இஸ்ரேலிய தீர்மானம்

## 'யுனெஸ்கோ' மாநாடு கண்டனம்

பெல்கிரேட், அக், 21

பெல்கிரேட்டில் நடைபெற்ற 'யுனெஸ்கோ' பொது மகாநாட்டுக் கூட்டத்தில ஜெருசலமை இஸ்ரேலின் தலைநகரமாக்குவதென்ற இஸ்ரேலிய அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் ஜோர்டானும் மற்றும் ஆபிரிக்க நாடுகளும் கொண்டுவந்த இத் தீர்மானத்திற்கு ஆதரவாக 78 நாடுகளும், எதிராக மூன்று நாடுகளும் வாக்களித்தன. 28 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

இஸ்ரேலின் இத் தீர்மானத்தை இந்தியாவும் கண்டனம் செய்தது. (வெ)

# இந்திய-சோவியத் கப்பல் ஒப்பந்தம்

மாஸ்கோ அக். 21

சோவியத்யூனியனும் இந்தியாவும் கப்பல்துறையைவளர்த்துக்கொள்வதற்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இவ் ஒப்பந்தத்தின் மூலம் இந்திய, சோவியத் கப்பல் துறை வளர்ச்சி மேலும் விரிவடையுமென இந்திய கப்பல் கூட்டுத்தாபனத் தலைவர் நம்பிக்கை தெரிவித்தார். (வெ)

# "இளைஞர்களின் உழைப்பே கிராமத்தின் வளர்ச்சிக்கு உயிர்நாடி"

## உதவி அரசாங்க அதிபர் கருத்து

(பட்டுவில்)

கிராம முன்னேற்றச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள் போன்ற இளைஞர்களின் ஒன்றுபட்ட உழைப்புத்தான் ஒவ்வொரு கிராமங்களின் வளர்ச்சிக்கும் உயிர்நாடியாக அமைந்துள்ளது' இந்த அடிப்படைத் தத்துவத்தை எமது இளைஞர்கள் உணர்ந்து கொள்வதின் மூலம் ஒவ்வொரு கிராமமும் உயர்வடைய முடியும்".

இவ்வாறு தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா மட்டுவில் தெற்கு சோமாஸ்கந்த சனசமூக நிலைய விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலையத்தலைவர் திரு. எஸ். குணவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் உதவி அரசாங்க அதிபர் திரு. துரைராஜா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"கிராமங்கள் பலதுறைகளிலும் வளர்ச்சியடைய வேண்டும். அதற்கு இளைஞர்களின் ஒத்துழைப்பும் விடா முயற்சியுமே முக்கிய கருவியாக அமைகின்றது. இதற்கு இளைஞர்கள் கிராம அபிவிருத்திக்காக சனசமூக நிலையங்களையும் கிராம முன்னேற்ற சங்கங்களையும், உருவாக்கி அதன்மூலம் கிராமத்தின் சுகாதாரம், கலை கலாச்சாரங்களையும்ஏனைய அபிவிருத்திகளையும் செய்யவேண்டும் என்றார். மற்றும் பலர் உரையாற்றினர்.

# மக்காவில் தீ விபத்து

ஜெட்டா, அக். 21

மக்காவிற்கு வெளியேயுள்ள மீனுவிலுள்ள முகாமில் தீ விபத்தொன்று ஏற்பட்டது. இத் தீ விபத்தினுல் இந்திய ஹஜ் யாத்ரிசர்கள் எவரும் பாதிக்கப்படவில்லையெனவும், காயமடையவில்லையெனவும், ஜெட்டாவிலுள்ள இந்திய தூதரகத்திலிருந்து வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய ஹஜ் யாத்ரிகர்கள் பாதுகாப்பாக உள்ளனரெனவும் அவை மேலும் கூறுகின்றன. (வெ)

# ஐ. நா. பாதுகாப்புச்சபை

நியுயோர்க், அக். 21

ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபையில் நிரந்தர அங்கத்துவமில்லாத இடங்களுக்கு ஸ்பெயின், உகண்டா, அயர்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

கடைசி நிமிடத்தில் கியூபா இவ் அங்கத்துவ பதவிக்கான போட்டியிலிருந்து விலகிக் கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

# சஞ்சய் நினைவாக....

புதுடில்லி, அக். 21

உத்தரபிரதேசத்திலுள்ள சமாதி மாவட்டத்தில் தேசிய மிருகக்காட்சிச்சாலை ஒன்றை காலஞ்சென்ற திரு. சஞ்சய் காந்தி ஞாபகார்த்தமாக நிறுவுவதற்கு உத்தரப்பிரதேச மாநில அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மிருகக்காட்சிசாலையில் வனவிலங்குகள் பராமரித்து வளர்க்கப்படுமெனக் கூறப்படுகிறது. (வெ)

# ரயில் விபத்தில் 6 பேர் பலி!

புதுடில்லி, அக். 21

பஞ்சாபிலிருந்து வந்த ரயில் சரக்கு வண்டியொன்றுடன் மோதியபோது 6 பேர் மாண்டனர். 35 பேர் காயமடைந்தனர். இவர்களில் மூன்று பேர் கடுமையான காயத்திற்குள்ளாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. இவ் விபத்துக்கான காரணம்பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை. (வெ)

# பாலர் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கிராமிய மீளமைப்பு நிறுவனத்தின் ஆதரவில் சிறுப்பிட்டி கந்தசாமி ஞாபகார்த்த பாலர் பாடசாலை விஜயதசமியன்றுதிறந்து வைக்கப்பட்டது. கிராமி மீளமைப்பு நிறுவனத்தின் தலைவர் திரு பொ. கு. பொன்னம்பலம் இப்பாடசாலையைத் திறந்து வைத்தார்.

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30 மணிக்கு 4 காட்சிகள்
கீதாலயா மூவிஸ் அளிக்கும்
மாத்தளை கார்த்திகேசுவின் மூன்குமார், K.S. பாலச்சந்திரன், பரீனுலை, விஜயராஜா நடித்த
'அவள் ஒரு ஜீவநதி' சிறந்த தமிழ் திரைக் காவியம்.

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30, சனி-ஞாயிறு 2-30
புகுந்த வீடு

எழில் மிகு யாழ். ஸ்ரீதர் அரங்கில்
வெற்றி முரசு கொட்டும் 3-வது வாரமாக
அலை மோதும் ஜனசமுத்திரத்தில் கொட்டும் மழையிலும் கொட்டகை நிறைந்த காட்சிகளாக
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட தமிழக முதல்வர் M G R மற்றும்
லதா, நிர்மலா, V K. ராமசாமி, P S வீரப்பா நம்பியார், தேங்காய், நாகேஷ், கண்ணன்
மற்றும் பலர் திறம்பட நடித்த ஸ்ரீதரின்
மீனவ நண்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 4-45, 7-00 & 9-45
Kris Kristofferson, Burt Young, Ali Macgraw
in
CONVOY
(Scope—Color)
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## அமைச்சரவை விஸ்தரிப்பு

சென்னை, அக் 21

தமிழ்நாடு அமைச்சரவை விரைவில் விஸ்தரிக்கப்படும்.

சில அமைச்சர்களின் இலாகாக்களும் மாற்றி அமைக்கப்படவிருக்கிறது.

பத்தாம் வகுப்பு - தமிழ்மொழி
இரண்டாம் பகுதிக்கான
20
கட்டுரைப் பூந்துணர்
விலை 8-25
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# "பண்டிதமணி யுகபுருஷர்"

## நூல் வெளியீட்டு விழாவில் நீதிபதி மகேசன்

(கொடிகாமம்)

"ஒவ்வொரு யுகத்திலும் மகாபுருஷர்கள் தோன்றுவதாகச் சரித்திரம் உண்டு. கலியுகத்தில் தோன்றிய புருஷர்களில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை மகா புருஷராவர். அவரது பேச்சுக்களிலோ, கட்டுரைகளிலோ தர்மம், நீதி என்பன அடிப்படைக் கருத்துக்களாக இருக்கும் பேரறிஞராகிய பண்டிதமணி எழுதியுள்ள 'பாரத நவமணிகள்' நூலில் உயர்நீதி தருமக்கருத்துக்களைப் பரக்கக் காணலாம். பண்டிதமணியைப் பெற்றெடுத்தது தென்மராட்சி செய்துவைத்த பெருந்தவத்தின்பேறேயாகும். பாரதநவமணிகளை அச்சிட்டு வெளியிட்டுள்ள செந்தமிழ் மன்றத்தை உளமாரப் பாராட்டுகின்றேன்."

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை எழுதிய பாரத நவமணிகள் இரண்டாம் பதிப்பினை வெளியிட்டு வைத்துப்பேசிய பருத்தித்துறை நீதிபதி திரு. கே. எஸ். மகேசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். செந்தமிழ் மன்றத் தலைவர் ஆசிரியமணி ஆர். டி. சுப்பிரமணியம் தலைமையில் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில் செயலாளர் பண்டிதர் பொ. கந்தையனார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

முன்னாள் தமிழ்மொழி இலாகா உதவி ஆணையாளர் திரு. அ. வி. மயில்வாகனம் பேசுகையில், "பண்டிதமணியிடம் ஏகலைவன் நிலையில் வாழ்ந்தவன் நான். பெரிய பட்டப் படிப்பெல்லாம் ஆங்கில மொழிமூலம் கற்றிருந்தும் என்னிடம் எழுந்த கல்விப் பசியைப் போக்கியவர் பேராறிஞர் பண்டிதமணிஐயா. இற்றைக்குநாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரே அவருடன் தொடர்புகொள்ள முடிந்தது, இலக்கியத்துறையில் கொடிகட்டிப் பறந்த பண்டிதமணியை சமயத்துறையில் ஈடுபடவைத்தவர் குறுமுனிவரான பேராசிரியர் திரு. பொ. கைலாசபதி. திரு. கைலாசபதி பண்டிதமணிக்கு ஊட்டிய அமிர்த சமய சஞ்சீவியைப் பண்டிதமணி எழுதிய பாரத நவமணிகளில் பலநூற்றுக் கணக்கான இடங்களில் நுகர முடிகிறது. பாரத நவமணிகள் என்ற நூல் ஒவ்வொருவர் இல்லத்திலும் வைத்துப்பாதுகாக்க வேண்டிய அரிய 'பொக்கிஷம்' என்றார்.

தென்மராட்சித் தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. த. காசிநாதன் பேசுகையில்; "வேத உபநிடத வாக்கியங்களைச் சின்னஞ்சிறு வசனங்களில் எழுதி உதவுகின்ற பெருமை இந்த நூற்றாண்டில் பண்டிதமணிக்கே உரியது. அவர் எழுதிய இலக்கிய வழியோ, சிந்தனைக் களஞ்சியமோ, அன்றி இன்று வெளியாகும் பாரத நவமணியோ இவற்றில் எது உயர்ந்தது என்று சொல்லமுடியாத அளவுக்கு ஒவ்வொரு கட்டுரையிலும், ஒவ்வொரு வசனத்திலும் பொருள் புதைந்து மணிமணியான கருத்துக்களை வழங்கியுள்ளார்கள். பண்டிதமணி ஐயா. அவரது நூலை ஒவ்வொருவரும் பெற்று வாசித்துப் பயன் அடைவதே பெரும் பாக்கியம்" என்றார்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் பேசுகையில் 'ஒருவரதுகருத்துக்கள் அவர் ஜீவந்தராயிருக்கும் போதே நூல் வடிவு பெறுமானல் அது பெரும் சிறப்பாகும். பண்டிதர் ஐயாவின் நூல்கள் அடிக்கடி வெளிவருவதில் மிகவும் மகிழ்ச்சியடைபவர்களில் நானும் ஒருவன்.

அவரது நூல்கள் பலவற்றை வெளியிட்ட பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை, அன்பினைத் திணைகள், ஆத்வைத சிந்தனைகள், கந்தபுராண நவமணிகள் என்ற தலைப்புகளைக் கொண்ட நூல்களை வெகுவிரைவில் வெளியிட ஏற்பாடு செய்து வருகின்றது. ஆறுமுகநாவலரை வெளியிட்டுப் பெருமை பெற்ற தென்மராட்சி செந்தமிழ் மன்றம், இப்பொழுது பாரத நவமணிகளை இரண்டாம் பதிப்பாக வெளியிடுவதில் நாம் பெரிதும் மகிழ்ச்சி கொள்ளுகின்றோம். மன்றத்தின் செயலாளர் பண்டிதர் பொ. கந்தையனாரையும் தலைவர் ஆசிரியமணி ஆர். டி. சுப்பிரமணியத்தையும் எப்படிப் பாராட்டினாலும் தகும்" என்றார்.

திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் நன்றி தெரிவித்துப் பேசினார். பண்டிதமணியின் ஆசியுரையும் இடம்பெற்றது.

## உரியகாலத்தில் வழங்குவதில்லையாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியில் உபதபால் நிலையங்களில் வழங்கப்படுகின்ற மாதாந்த உபகாரப்படி உரிய நாட்களில் வழங்கப்படுவதில்லை.

இப்படியைப் பெறுவதற்காக பலதடவை உபதபால் நிலையபடி ஏறிஇறங்க வேண்டியிருப்பதாக உபகாரப்படி பெறுவோர் அதிருப்தி தெரிவித்தனர்.

மாதாந்தம் 6-ம் திகதி வழங்கப்படவேண்டிய இப்படி பத்தாம் திகதிக்கு பின்புதான் வழங்கப்படுகின்றதாம்.

## யோகேஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"இவ் அறிக்கையின் படி ஒதுக்கப்பட்ட நிதி இரண்டு கோடியே இருபது லட்சம் ரூபா. இதில் ஒரு கோடியே எழுபத்தாறு இலட்சம் ரூபா செலவிடப்பட்டது. நாற்பத்து நாலு இலட்சம் ரூபா இயந்திரங்கள் வாங்குவதற்கெனச் செலவிடப்பட்டது.'

இத்தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

## சிறப்பாக நடந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை ஆயுள்வேத வைத்தியசாலையில் வாணி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவை மேற்படி வைத்தியசாலை டாக்டர்கள், ஊழியர்கள் ஒன்றுசேர்ந்து நடத்தினர். (கொ)

# "10லட்சம் ஏக்கர் வயலுக்கு பாசனவசதி கிடைக்கும்"

## செங்கலடியில் அமைச்சர் காமினி

(மட்டக்களப்பு)

"இன்றைய அரசாங்கம்நாட்டின் நீண்டகால அபிவிருத்திக்கு திட்டமிட்டு செயலாற்றி வருகின்றது. எதிர்காலத்தில் இலங்கையின் சனத்தொகை அதிகரிக்கும்பொழுது இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மக்களுக்கு வரப்பிரசாதமாக அமையும். மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 10 லட்சம் ஏக்கர் வயல்களுக்கு நீர்ப்பாசன வசதியளிக்கக் கூடியதாகவிருக்கும்."

மேற்கண்டவாறு காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா செங்கலடியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:

மகாவலி அபிவிருத்தித் திட்டம் நாட்டின் நீண்டகால மின்சக்தி தேவையையும் பூர்த்தி செய்யும் என்றார்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் கூறியதாவது:

மதுறுஓயாத் திட்டத்தின் கீழ் கல்குடாத் தொகுதியில் 1500 குடும்பங்கள் குடியமர்த்தப்படும். இத்திட்டம் 33,000 ஏக்கர் காணிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளை அமைக்கும். அம்பாறையிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரியிலும், மற்றும் நிலஅளவை கல்லூரியிலும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் ஈடுபடும் தொழில் நுட்பவியலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இதற்கான நிதி மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பெரும்பாக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்திருக்கிறார்.

இப்பெரும்பாக கல்விப் பணிப்பாளர்கள் அவ்வப் பிராந்தியங்களில் நிலவும் நிர்வாக குறைபாடுகள் பற்றி பரிசீலனை செய்து கல்வி அலுவலகங்கள் நல்ல முறையில் இயங்குவதில் கவனம் செலுத்துவார்கள். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்களுக்கு புறம்பாக இவர்கள் அவ்வப்பிராந்தியத்தின் திறமையான நிர்வாகத்துக்கு பொறுப்பாக இருப்பார்கள்.

ஒவ்வொரு பிராந்தியங்களிலும் கல்வி அபிவிருத்திக்கான திட்டங்களையும் அவற்றின் அமுலாக்கங்களையும் இவர்கள் மேற்பார்வையிடுவார்கள்.

ஒவ்வொரு கல்வி அலுவலகங்களுக்கும் பெரும்பாக கல்வி பணிப்பாளர்கள் ஒவ்வொரு மாதத்துக்குமான அபிவிருத்தி திட்டங்களை அனுப்பிவைப்பார்கள். அவர்களின் இத்திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளை கல்வி அலுவலகங்கள் மாதமுடிவில் அவர்களுக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

இவை தொடர்பான சுற்றறிக்கை சகல கல்வி அலுவலகங்களுக்கும் கல்வி அமைச்சின் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## ஈராக்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றுள்ளார்.

இவர் இந்த யுத்தம் தொடர்பாக ஈரானின் முடிவை எதிர்பார்த்து அங்கு தங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்-ஈரான் யுத்த சமரச முயற்சி தொடர்பாக இவர் ஈரானிய மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னியுடனும், ஈரானிய ஜனாதிபதி பானி சத்தருடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதேவேளை ஈராக்கியத் துருப்புக்கள் ஈரானின் குசெஸ்தான் மாகாணத்தின் மீதும், கொரம்ஷார், அபடான் நகரங்கள் மீதும் கடும் தாக்குதலைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளதாக பாக்தாத் வானொலி அறிவித்துள்ளது.

## பிரதமர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை மறுத்தார்.

"நமது மனப்போக்கு காரணமாக பல நாடுகள் தங்களது கொள்கைகளை மாற்றியுள்ளன. இதுமட்டுமன்றி தீர்வுகாண்பதற்காக நம்மை நாடுகின்றன. இது, நமக்குக் கிடைத்த ஒரு நற்சான்றிதழ் அல்லவா?" என்று பிரதமர் கேட்டார்.

## கலந்துரையாடலும் விமர்சன அரங்கும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியத்தின் சோதிட கலந்துரையாடலும்; நூல் விமர்சன அரங்கும் நாளை மாலை நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில், இலங்கையின் பிரபல சோதிடர்களான திருவாளர்கள் கே. டபிள்யு. தம்பையா, எஸ். அழகரெட்னம், சோதிட பரிபாலன முதல்வர் இ. சி. இ. வெங்கடேசஐயர், திருக்கணித நிலைய முதல்வர் கே. சதாசிவசர்மா, பண்டித நவரத்தினம், பி. சங்கரப்பிள்ளை, வதிரியூர் மு. கனகரத்தினம் உட்பட பலர் அழைக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலத்தில் சோதிடம் சம்பந்தமாக வெளிவந்த நூல்கள் விமர்சனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

ஆரம்ப உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளரும், மேற்படி ஒன்றியத் தலைவருமான திரு. நா. சுப்பிரமணியஐயரும், அருளுரையை, ஆதீன முதல்வர் சுவாமிஜி பரமாச்சாரிய தம்பிரான் சுவாமிகளும் வழங்குவார்.

## பயிற்சி

ரேடியோ டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங் மூன்று மாத டிப்ளோமா பயிற்சி வகுப்புக்கள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் 25-10-80 இல் ஆரம்பம் ஆகின்றன. அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, 11, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7151

## புதிய வீதி இலக்கம்

(நெல்லியடி)

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை, பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவினல் நடத்தப்பட்டுவரும் நாகர் கோவில் பஸ் சேவைக்கு புதிய வீதி இலக்கத்தை வழங்கியுள்ளது. 762/1 என்று நடைமுறையிலிருந்த வீதி இலக்கம், 755 என புதிய இலக்கமாக மாற்றப்பட்டுள்ளது.

அதே போல கப்புது பஸ் சேவைக்கும் 746 என்ற புதிய வீதி இலக்கமும் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையால் வழங்கப்பட்டுள்ளது.

## பல்கலைக் கழகத்துக்கு நூல் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள இந்தியத் தூதுவர் திரு. தோமஸ் ஏபிரகாம் இன்று காலை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்து, பல்கலைக்கழகத்திற்கு தமிழ் ஆங்கில நூல்களை அன்பளிப்புச் செய்வார். (கொ)

## சுகாதாரப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பாடசாலை சுகாதார திட்டத்தின் கீழ் மாணவருக்கும், ஆசிரியர்களுக்கும், அமைச்சு அதிகாரிகளுக்கும் சுகாதாரப் பயிற்சியை கல்வி அமைச்சும், சுகாதார அமைச்சும் இணைந்து நடாத்தவுள்ளன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் மேருகு வீ, 6-ம் இலக்க அச்சகத்தில் அக். 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. GB 8948/78 The Eelanaadu P.B. No 49
Tgrams Eelanaadu. Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org